செய்தி வெளியீடு – 461 நாள்–23.7.2007

<u>செய்தி வெளியீடு</u>

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலம்**
**அரசு கால்நடை மருத்துவமனைகளில் 220 கால்நடை உதவி மருத்துவர்கள் நியமனம்**
**முதலமைச்சர் கலைஞர் நியமன ஆணைகளை வழங்கினார்**

**தமிழகம் முழுவதிலும் உள்ள கால்நடை மருத்துவமனைகளுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் கால்நடை உதவி மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு வந்தனர். 2001ஆம் ஆண்டில் முந்தைய அ.தி.மு.க அரசு நடைமுறைப்படுத்திய பணி நியமனத் தடைச் சட்டம் காரணமாகக் காலிப் பணியிடங்கள் இருந்தும் அரசுத் துறைகளில் புதிய நியமனங்கள் மேற்கொள்ளப்படாதது போலவே, அரசு கால்நடை மருத்துவமனைகளிலும் காலிப் பணியிடங்களில் கால்நடை உதவி மருத்துவர்கள் நியமனம் செய்யப்படவில்லை.**

**தி.மு.க. அரசு பொறுப்பேற்றதும் பணி நியமனத் தடைச் சட்டத்தை ரத்து செய்தது. அதன் தொடர்ச்சியாக, தற்போது அரசு கால்நடை மருத்துவமனைகளில் காலியாக உள்ள 250 பணியிடங்களில் கால்நடை உதவி மருத்துவர்களை நியமனம் செய்திட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் முறைப்படி எழுத்துத் தேர்வு, நேர்முகத் தேர்வு முதலிய தேர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு தகுதியானவர்களைத் தேர்வு செய்துள்ளது.**

**தேர்வு செய்யப்பட்டுள்ளவர்களில் முதற்கட்டமாக, 220 பேர் அரசு கால்நடை மருத்துவ மனைகளில் கால்நடை உதவி மருத்துவர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 10 கால்நடை உதவி மருத்துவர்களுக்கு, அவர்களது நியமன ஆணைகளை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமைச் செயலகத்தில் இன்று (24.7.2007) வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்தார்.**

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.